சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். 119/2017

**PW 1 நாகராஜ்** **24.11.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என கேட்டால் சொத்து எனது தகப்பனார் திருமூர்த்தி உடையது என்றும், அதனை மாற்றி எழுதி விட்டார்கள் என்றும் அதனால் சொத்து எங்களுக்கு சொந்தமானது என்று அறிவிக்க கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கை யார் யார் சேர்ந்து தாக்கல் செய்துள்ளார்கள் என்று கேட்டால் எனது தாயார், சாந்தி, குப்புசாமி, நான், இறந்துபோன சிவகாமி, இறந்துபோன சக்திவேல் ஆகியோர் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம். மேற்சொன்ன நபர்கள் கூடி பேசி தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்ட 1ம் வாதி என்னுடைய அண்ணன், இந்த வழக்கில் கண்ட 3ம் வாதி என்னுடைய மூத்த சகோதரி, சிவகாமி என்னுடைய தங்கை, சக்திவேல் சிவகாமியின் கணவர், குப்பம்மாள் என்னுடைய தாயார். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என கேட்டால் நகராட்சியில் துப்புறவு பணி செய்து வருகிறேன். நகராட்சியில் 2002-2003 ம் ஆண்டிலிருந்து சுமார் 20 வருடம் நான் துப்புரவு வேலை செய்தேன். தற்போது என்ன வேலை செய்து வருகிறேன் என கேட்டால் பைனான்ஸ் மற்றும் கேபிள் ஆப்ரேட்டர் தொழில் செய்து வருகிறேன். நான் அரசியல் கட்சியிலும் உறுப்பினராக இருந்து வருகிறேன். எனது சகோதரர் என்ன வேலை செய்து வருகிறார் என கேட்டால் ஜமீன் ஊத்துக்குளி பஞ்சாயத்தில் துப்புரவு பணி செய்து வருகிறார். அவர் எப்போதிலிருந்து துப்புரவு பணி செய்து வருகிறார் என கேட்டால் 2002-2003ம் ஆண்டிலிருந்து தற்போது வரை

மேற்கண்ட பஞ்சாயத்தில் துப்புரவு பணி செய்து வருகிறார். எனது அண்ணன் 5ம் வகுப்பு வரை படித்துள்ளார். நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது சகோதரி உடுமலைப்பேட்டையில் காம்ப்ளக்ஸில் துப்புரவு பணி செய்து வருகிறார். மேலும் பத்திர எழுதர் அலுவலகத்தில் துப்புரவு பணி செய்து வருகிறார் என்றால் சரிதான். அவர் 4ம் வகுப்பு வரை படித்துள்ளார். இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு எனது தாயார் உயிருடம் இருக்கும் போதே அவர் பெயரில் நகல் எடுத்து நடவடிக்கை எடுத்தேன் என்றால் சரிதான். நான் எனது தாயாரோடு சென்று தான் வழக்கிற்கு தேவையான ஆவணங்களை சான்று நகல் சார்பதிவகத்தில் பெற்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நகல் எடுப்பதற்கு முன்பே தாவா சொத்தை பொறுத்த வில்லங்கத்தை பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் கூறுகிறார் 2 வது ஆக வில்லங்கம் எடுத்து பார்த்த போது தான் தெரியும் என கூறுகிறார். என்னிடம் காட்டப்படும் வாசாஆ 11 எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து இதற்கு முன்பே வில்லங்கத்தை தெரிந்து கொண்டு தான் நகல்கள் பெற்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாசாஆ 1 முதல் வாசாஆ 3 வரையிலான ஆவணங்கள் சார்பதிகவத்தில் நகல் போடப்பட்டு நானும், எனது தாயாரும் பெற்ற ஆவணங்கள் என்றால் சரிதான். எனது தாயார் பெயரில் தான் முத்திரை தாள் பெறப்பட்டு நகல்கள் பெறப்பட்டன என்றால் சரிதான். வாசாஆ 4 ஆவணம் ஆனது எங்களால் மோசடியாக பெறப்பட்ட ஆவணம் என்றால் அது சரியல்ல. அந்த ஆவணம் 29.12.2014 அன்று தான் பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான், அந்த ஆவணம் வழக்கு தாக்கல் செய்ய வாங்கப்பட்டது. மேற்கண்ட ஆவணத்தை பிரதிவாதிகள் மறுத்துள்ள நிலையில் நான் அதனை நிருபணம் செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வாசாஆ 5 யும் பிரதிவாதி

மறுத்துள்ள நிலையில் நான் தான் அந்த ஆவணத்தை நிருபணம் செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. மேற்கண்ட ஆவணம் வழக்கிற்காக மோசடியாக பெறப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வாசாஆ 6, வாசாஆ 7 ஆவணங்கள் வழக்கிற்காக மோசடியாக பெறப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. வாசாஆ 9, வாசாஆ 10 ஆவணங்கள் சொத்தை அபகரிக்க எங்களால் தயாரித்து அனுப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. வாசாஆ 8 பட்டாவில் உள்ள நாகன் மகன் திருமூர்த்தி என்பவர் பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்த உண்மையான நபர் என்றும், அதனால் அவர் பெயர் இடம்பெற்றது என்று சொன்னால் அது சரியல்ல. நான் சொல்வது போல நாகன் மகன் திருமூர்த்தி என்று குறிப்பிடவில்லை என்றும் நா.திருமூர்த்தி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் திருமூர்த்தியின் இன்சியல் தான் நா என குறிப்பிடப்பட்டுள்ளது. நா என்பதின் விரிவாக்கம் நாகன் என்பதாகும். வாசாஆ 14, வாசாஆ 15 ஆவணங்கள் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது ஏன்றும் நீதிமன்றங்களில் நிருபிக்க முடியாது என்றால் சரியல்ல நான் கோரியுள்ள பரிகாரங்களுக்கும் வாசாஆ 14, 15 க்கும் அதில் கண்ட நபருக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் அது சரியல்ல. வாசாஆ 12, 13 ஆவணங்கள் பிரதிவாதிகளை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வழக்கானது காலவரைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டது என்றும் அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்குள்ளது என கேட்டால் அங்கலகுறிச்சியில் உள்ளது. தாவா சொத்தின் காலை எண் 194/1 ஆகும் அதன் விஸ்தீரணம் எவ்வளவு என கேட்டால் சுமார் 13 1/2 செண்ட் ஆகும் அதன் அளவுகள் குறிப்பிட்டு தெரியாது. தாவா சொத்தின் நான்கு எல்லை விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை பற்றி எந்த விவரமும் தெரியாது என்றும் தாவா சொத்தை

அபகரிக்க வேண்டி தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ட விவரங்கள் நான் கூறியதன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல்ல செய்துள்ள எதிர்வழக்குரையில் கண்ட விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கு சொத்தில் 2003 ம் ஆண்டிலேயே 2, 3 பிரதிவாதிகள் கட்டிட அனுமதி பெற்று கட்டிடங்களை கட்டி தற்போது அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் 2 வது ஆக ஆதெரியும், ஆனைமலையில் நகல் போட்டு பார்த்த போது தெரிந்து கொண்டேன். இந்த சொத்திற்குண்டான பதிவு ஆவணங்களை 3 ம் பிரதிவாதி தான் வைத்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. 14.03.1983 ம் ஆண்டில் தாவா சொத்திற்கு உரிய காலியிட கிரய பத்திரத்தின் அசல் 3 ம் பிரதிவாதியிடம் உள்ளது என சொன்னால் எனது தகப்பனார் இறப்பதற்கு முன்பு அந்த ஆவணத்தை 1 ம் பிரதிவாதியிடம் கொடுத்துவைத்திருந்தார். மேற்கண்ட பத்திரத்தில் கண்ட திருமூர்த்தி தான் 18.03.1993 ல் அடமானக் கடன் பத்திரமும் எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் அப்போது நான் சிறு குழந்தையாக இருந்தேன் அதனால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. 31.01.1996 ல் திருமூர்த்தி கிரய பத்திரத்தை 1 ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல அப்போது எனது தகப்பனார் இறந்துவிட்டார் நான் சொல்வது பொய் என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட திருமூர்த்தி 1 ம் பிரதிவாதிக்கு வழக்கு சொ்தை கிரயம் எழுதி கொடுத்த கிரய பத்திரத்தில் உள்ள கையொப்பம் மற்றும் கைரேகை போலியானது என்று நிரூபிக்க நீதிமன்றத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல.

**(குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி